<u>கொடைக்கானல் நகராட்சி</u>

**2020**ம் ஆண்டு ஜுன் மாதம் **8**ஆம் நாள் (**8.06.2020**) திங்கட்கிழமை முற்பகல் **11.30** மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

**1)** தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP 2020-2021) ன் கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு சாலைகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. **500.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | சிப்பம் எண். | பணியின் விபரம் | நீளம் ( கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | I | நாயுடுபுரம் விநாயகர் கோயில் முதல் நகராட்சி எல்லை வரை மற்றும் பாம்பார்புரம் முதல் தெரசா பள்ளி வரை தார்ச்சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் | 1.53 | 5.5m | 200.00 |
| 2 | II | பழைய கான்வெண்ட் சாலை மற்றும் ரைபிள் ரேஞ்ச் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 1.30 | 6.50 | 100.00 |
| 3 | III | லாயிட்ஸ் சாலை முதல் பியர்சோலா (கல்லுக்குழி) தார்ச்சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் | 1.33 | 6.50 | 200.00 |
| | | Total | 4.16 | | 500.00 |

எனவே, மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP 2020-2021) ன் கீழ் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், முழு மானியமும் வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. **1)** அனுமதிக்கலாம்.
**2)** நகராட்சி பங்குத் தொகை நிர்வாக அனுமதியில் அறிவுறுத்தும்பட்சத்தில் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் ஈடு செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **832, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

**2)** கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மண் அணையிலிருந்து அண்ணாசாலையில் உள்ள **2.35** லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டிக்கு gravity மூலம் குடிநீர் கொண்டு செல்லப்பட்டு வார்டு எண். **8, 9,10,11, 12** மற்றும் **14** வது வார்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடை காலஙகளில் சீரான குடிநீர் வழஙகும் பொருட்டு மண் அணையின் அருகில் Ring Well புதியதாக அமைத்து **30** மீட்டர் தொலைவில் உள்ள Clear Water Sump க்கு இணைப்பு கொடுத்தால் மேற்கண்ட **6** வார்டுகளும் பயன்பெறும். இதே போல் செல்லபுரம் தடுப்பணை அருகில் புதியதாக Ring well அமைத்து அருகில் உள்ள gravity Main ல் இணைப்பு கொடுத்தால் புதுக்காடு அப்சர்வேட்டரி மற்றும் செல்லபுரம் பகுதிகளுக்கு சீரான குடிநீர் சப்ளை செய்ய இயலும். எனவே, செல்லபுரம் தடுப்பணை மற்றும் மண் அணைபகுதியில் Ring well அமைத்திட குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. **6.80** இலட்சத்திற்கு தயார் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. குடிநீர் பணியின் அவசர தேவையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **833, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3)கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு பிரிவில் உள்ள கணணி மற்றும் பிரிண்டர்கள் பழுதடைந்துள்ளது. இதனை மேற்கொண்டு சர்வீஸ் செய்திட இயலாத நிலையில் உள்ளது. எனவே, புதியதாக மூன்று கணணிகள் மற்றும் ஒரு பிரிண்டர் அரசு நிர்ணய விலையில் Government e-Market Place (GEM) பதிவு செய்து வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3.50 இலட்சம் ஆகும்.

| Sl.No. | Items | Qty |
|---|---|---|
| Town Planning Section | | |
| 1 | Desk Top | 1 No |
| 2 | HP Laser Printer | 1 No |
| Engg., Section | | |
| 3 | Hard Disk | 2 Nos |
| 4 | Desk Top | 2 Nos |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **834, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, நகர் பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அண்ணாநகர் பகுதில் 3 நபர்களுக்கு நோய் தொற்று உறுதி செய்யப்பட்டுவிட்டதால், இப்பகுதி மக்களுக்கு தேவையான பாதுகாப்பு முககவசம், நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகள் கீழ்கண்ட விபரப்படி தேவைப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விபரம் | அளவு (டன்) |
|---|---|---|
| 1 | 2 Play Cotton Mask | 2000 எண்ணம் |
| 2 | கபசுர குடிநீர் பவுடர் | 50 கிலோ |
| 3 | தெர்மல் ஸ்கேனர் | 3 எண்ணம் |
| 4 | Arsenicum Album 30 (small size-100 Nos) | 300 bottle |

எனவே மேற்கண்ட பொருட்கள் அத்தியாவசிய அவரமாக தேவையாக உள்ளதால் சுகாதார பணியின் அவரம் கருதி ஏற்கனவே கொள்முதல் செய்த அரசு கூட்டுறவு நிறுவனமான திண்டுக்கல் மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 16ஏ, எஸ்.ஆர். மில்ஸ் ரோடு, திண்டுக்கல்லில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1.77 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு.

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **835, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) மூலதன மானிய நிதி மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி (ம) இயக்குதல் (ம) பராமரிப்பு நிதி 2019–2020 ன் கீழ் கொடைக்கானல் நகராட்சி, வார்டு டி, பிளாக் 3, நகரவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சி கூடம் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சி, வார்டு டி, பிளாக் 3, நகரவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சி கூடம் அமைத்தல் | Accord Advertising Agencies, Chennai (Deccan Chronicle, Makkal Kural dated 03.03.2020) State Level | AAA/0822/ 19-20 dated 06.03.2020 | **71820/–** |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண். 27/2009/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **836, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிகு சொந்தமான குப்பை கிடங்கில் மும்முணை மின் இணைப்பிற்கு தேவையான பேனல் போர்டு மற்றும் வயரிங செய்யும் பணிக்கு 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் மும்முணை மின் இணைப்பிற்கு தேவையான பேனல் போர்டு மற்றும் வயரிங செய்தல் | 2.90 | M/s. மாருதி டிரேடர்ஸ், தேனி<br><br>G. சிவக்குமார், நகராட்சி ஒப்பந்ததாரர் | 0.06% குறைவு<br><br>0.72% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மாருதி டிரேடர்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **837, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நபர்கள் அடையாளப்படுத்தப்பட்டு அப்பகுதி கட்டுப்பாட்டு பகுதியாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. தற்போது அதிகளவில் கட்டுப்பாட்டு பகுதிகள் ஏற்பட்டுள்ளதால் மேலும், தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு , பொதுமக்கள் மற்றும் போக்குவரத்தினை தடைசெய்திட தகரத்தினால் ஆன தடுப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, கட்டுப்பாட்டு பகுதியில் தகர தடுப்புகள் அமைப்பதற்கு பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசால் கொரோனா வைரஸ் தடுப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **838, நாள். 8.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.